அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 24/2018

எனது இலக்கம்: EST 5/4/24 (XXVII)
அரச நிருவாக, முகாமைத்துவ மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2018.09.07

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>சம்பளம் தொடர்பான பொருள் கோடல்கள்</u>**

அரச அலுவலர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய கடமைகளின் போது "சம்பளம்" எனும் பதம் பல்வேறு வகையிலான பொருள் கோடல்கள் வழங்கப்படுவதனை அவதானிக்கப்பட்டுள்ளது.

02. அதனால் தாபன விதிக்கோவையின் I ஆம் அத்தியாயத்தின் 1 ஆம் பிரிவின் பொருள் கோடலுடன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள "சம்பளம்" எனும் பதத்திற்கு கீழமைந்த பிரிவிற்குப் பதிலாக பின்வரும் பிரிவு உள்ளடக்கப்பட்டு தாபன விதிக்கோவையினை திருத்தியமைப்பதற்கு 2018.07.24 ஆந் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

> **"சம்பளம்" என்பதால் கருதப்படுவது சம்பள அளவுத்திட்டம் அல்லது நிலையான சம்பளத்தின் கீழ் குறிப்பிடப்படும் கொடுப்பனவற்ற சம்பளம் என்பதோடு வேறு ஆணையொன்று இடப்பட்டிருக்காதுவிடின் அதில் எதுவித கொடுப்பனவும் உள்ளடக்கப்படுவதில்லை.**

03. அதற்கிணங்க தாபன விதிக்கோவையில் "சம்பளம்" என்பதால் குறித்துரைக்கப்படும் ஏனைய இடங்களிலும் திருத்தங்ளை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

04. இச் சுற்றறிக்கை தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணிகள் ஆணைக்குழுவினதும் உடன்பாட்டுடன் வெளியிடப்பட்டுள்ளது.

ஒப்பம்/. பத்மசிறி ஜயமான்ன
செயலாளர்
அரச நிருவாக, முகாமைத்துவ மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு